**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

CC.No. 10/2020

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 6 |
| Name (திரு/திருமதி) | : | ஜோஸ்பின் |
| Father's Name/ Husband's Name | : | விவேக் |
| Village & Taluk | : | சென்னை |
| Calling | : | டெய்லர் |
| Age | : | 45 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.07.2025**

**எதிரி ஆஜர்,**

**முதல் விசாரணை–**

அ.சா.1 எனது தந்தை ஆவார். அ.சா.2 என் தாய் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். 10.09.2018 அன்று சென்னையில் இருந்து எங்கள் வீட்டிற்கு வந்திருந்தேன். நான் என் தந்தைக்கு நண்பகல் 12.00 மணியளவில் போன் செய்து என்னை பாலப்பட்டிலிருந்து வீட்டிற்கு அழைத்து செல்லுமாறு கூறினேன். அதற்கு அவர் என்னிடம் தோட்டத்தில் இருப்பதாகவும் சிறிது நேரத்தில் வந்துவிடுவதாகவும் கூறினார். எனவே நான் அங்கு காத்துக்கொண்டிருந்தேன். அவர் வராத காரணத்தினால் நான் மீண்டும் அவருக்கு போன் செய்தபோது அவர் என்னிடம் எதிரி அவரையும், எனது அம்மாவையும் அடித்துவிட்டதாக கூறினார். மேலும், எனது தந்தை என்னிடம் அவர் இரத்த வெள்ளத்தில் இருப்பதாக கூறினார். பின்னர் நான் பாலப்பட்டுகிராத்தை சேர்ந்த ஒரு நபரிடம் உதவி கேட்டு எங்களது நிலத்திற்கு சென்றேன். அங்கு எனது பெற்றோர்களுக்கு காயம் ஏற்பட்டிருந்தது. காயமடைந்த அவர்களை ஆட்டோ மூலம் செஞ்சி அரசு மருத் துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். அங்கிருந்து எனது பெற்றோரை மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அருசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. சென்னையில் இருந்து அதிகாலை 05.00 மணிக்கு புறப்பட்டு செஞ்சிக்கு காலை 10.30 மணிக்கு வந்தடைந்தேன். செஞ்சியில் இருந்து ஒட்டப்பட்டிற்கு பேருந்து உள்ளது. நான் செஞ்சியில் இருந்து பாலப்பட்டு கிராமத்திற்கு பேருந்தில் சென்றேன். பாலப்பட்டில் இருந்து எனது தந்தைக்கு போன் செய்தேன். அப்போது நேரம் காலை 12.30 மணி இருக்கும். இரண்டாவது முறையாக அரை மணி நேரம் கழித்து எனது தந்தைக்கு மீண்டும் போன் செய்தேன். அப்போது தான் எனது தந்தை என்னிடம் வர முடியாத நிலமையில் உள்ளதாக கூறினார் என்றால் அவரை அடித்து போட்டுவிட்டதாக கூறினார். சம்பவம் தொடர்பாக வேறு யாரும் எனக்கு போன் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நான் சம்பவ இடத்திடம் சென்றபோது எதிரி அங்கு இல்லை. நான் அங்கு சென்றபோது எனது பெரியப்பா ஜார்ஜ் அங்கிருந்தார். அங்கு அவரை தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். எனது தந்தையும் எதிரியும்

அடித்துக்கொண்டார்கள் என்றாலும், எனது தந்தை மீது எதிரி புகார் அளித்துள்ளார் என்றாலும் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. எதிரி அவரது இடத்தில் பைப் புதைத்துக் கொண்டிருந்தார் என்றால் எங்கள் இடத்தில் எதிரி பைப் புதைத்ததாக எனது அப்பா என்னிடம் சொன்னார். மேற்படி பைப் புதைத்தது தொடர்பாகத்தான் எனது தந்தைக்கும் எதிரிக்கும் இடையே சண்டை நடந்தது என்றால் சரிதான். எனது பெற்றோர் மேற்படி சண்டையில் எதிரியை தாக்கிவிட்டார் என்றால் சரியல்ல.

3. நான் சம்பவத்தன்று சம்பவ இடத்திற்கே வரவில்லை என்றாலும், நான் அன்றைய தினம் சென்யையில் தான் இருந்தேன் என்றாலும் நான் எனது தந்தைக்கு ஆதரவாக அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி என் பெற்றோர்கள் மீது கொடுத்த புகாரில் இருந்து தப்பிக்க வேண்டி எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.